
பக்கங்கள் 19

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 05 வெள்ளிக்கிழமை 19.01.2024 அதிர்வு 172

## முல்லையில் கரையொதுங்கிய வெளிநாட்டு மீனவர் ஒருவரின் சடலம்



முல்லைத்தீவில் வெளிநாட்டு மீனவர் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது. 04



# கருணா என்ற துரோகியை தமிழ் மக்கள் நம்பினால் அவர்களைக் கடவுளாலும் காப்பாற்றவே முடியாது!

## மட்டக்களப்பில் கஜேந்திரகுமார் ஆவேசம்

(கனகராசா சரவணன்)

"தமிழ் மக்களின் இருப்பை அழித்தவர் கருணா. இந்தத் துரோகியைத் தமிழ் மக்கள் நம்பினால் கடவுளாலும் தமிழ் மக்களைக் காப்பாற்ற முடியாது."

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் உள்ளிட்டவர்களை இன்று 04

# உடப்பில் கரைவலை மீன்வாடி தீ வைப்பு; வள்ளம், வலை, இயந்திரப் படகுகள் நாசம்

## இனந்தெரியாத விஷமிகள் வெறியாட்டம்



புத்தளம், உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆண்டிமுனை கந்தசாமி கோயிலுக்கு அருகாமையில் உள்ள கரைவலை மீன்வாடி இனந்தெரியாத விஷமிகளால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளது.

நேற்று இரவு மீன்வாடியில் தொழிலாளிகள் இருந்து விட்டுச் சென்ற பின்னர் இன்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று கூறப்படுகின்றது. 04

# தொடரும் சோதனை நடவடிக்கை 24 மணி நேரத்தில் 963 பேர் கைது



நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ், இன்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் 963 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 638 பேரும், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அனுப்பப்பட்ட பட்டியலில் உள்ள 325 பேரும் அடங்குகின்றனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்களில் 10 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.


திரு. ராஜ் ராஜரட்ணம் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய
"UNEVEN JUSTICE"
என்ற நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு :

சமனற்ற நீதி

நூல் வெளியீடு

**ராஜ் ராஜரட்ணம்,** 1957 இல் இலங்கையில் பிறந்தார். இவருடைய தந்தையார் ராஜரட்ணம் அவர்கள் உலகப் புகழ் பெற்ற சிங்கர் நிறுவனத்தில் உயர்நிலை அதிகாரியாகக் கடமையாற்றியவர். இவரின் பூர்வீகம், யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பகுதியிலுள்ள "அல்வாய்" கிராமம் ஆகும்.


ராஜ் ராஜரட்ணம் அவர்கள் ஆரம்பக் கல்வியை இலங்கையிலும் இந்தியாவிலும் கற்றார். உயர்கல்வியை இங்கிலாந்தில் மேற்கொண்டு, சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டதாரியானார். அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் எம்.பி.ஏ பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். சேஸ் மேன்ஹாட்டன் வங்கியில் நிதிப் பகுப்பாய்வாளராகத் தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்தார். 1997 ஜனவரியில், தனது சொந்த நிறுவனமான உலகப்புகழ்பெற்ற "கலியன்" முதலீட்டு நிதியத்தை நிறுவினார். 2009 இல், அமெரிக்கப் புலனாய்வுப் பணியகம் ராஜ் ராஜரட்ணத்தை அதிரடியாகக் கைது செய்தது. அமெரிக்க அரசு அவர் மீது ஒருதொகை "உட்தகவல்" வணிகக் குற்றங்களைச் சுமத்தியது. குற்றங்களை ஒப்புக்கொள்ளுமாறு அரசுத் தரப்பு பல்வேறு அழுத்தங்களையும் நெருக்கடிகளையும் அவர்மீது பிரயோகித்தது. தன்மீது சுமத்தப்பட்டவை பொய்க் குற்றச்சாட்டுக்கள் என்பதில் உறுதியாக நின்ற ராஜ் ராஜரட்ணம் இறுதிவரை அமெரிக்க அரசுக்கு எதிராகச் சட்டப் போராட்டத்தை நடத்தினார். நீதிமன்றம் தனக்கு நீதி வழங்கும் என நம்பினார். ஆனால், அமெரிக்க நீதித்துறையிலுள்ள பேராசை பிடித்த சில தனிநபர்களின் சதிகளாலும் பொய்ச் சாட்சிகளாலும் அவர் வஞ்சிக்கப்பட்டார். அவருக்குப் பதினொரு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இலங்கையில் ராஜ் ராஜரட்ணத்தின் குழந்தைப் பருவம் முதல் அவரது ஐம்பத்துநான்காவது வயதில் அமெரிக்கச் சிறையில் அடைக்கப்பட்டது வரையான வரலாற்றை விவரிக்கும் நூலை அவர் சிறையில் இருந்தபோது எழுதினார். இந்நூல் **Uneven Justice** என்ற தலைப்போடு 2021 இல் ஆங்கிலத்தில் வெளியாகி மிகுந்த கவனத்தைப் பெற்றது. அந்நூல் இப்போது தமிழில் வெளியாகிறது.

அமெரிக்க நீதித்துறையிலுள்ள ஊழல்களையும் குறைபாடுகளையும் உள்ளது உள்ளபடியே தைரியமாகச் சொல்லும் இந்நூலிலுள்ள ஒவ்வொரு எழுத்திலும் அநீதியாகத் தண்டிக்கப்பட்ட ஒரு மனிதனின் நீதி கோரிய குரல் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

**சமனற்ற நீதி : மாணவர்கள், இளைஞர்களிடையே எந்தவொரு விடயத்தையும் அச்சமின்றி எதிர்கொள்ளக்கூடிய தன்னம்பிக்கையையும், உந்துதலையும் வழங்குகிறது. இந்நூல் நிதி, நிர்வாகம், சட்டம் மற்றும் வணிகத்துறையில் உள்ளவர்கள் சவால்களை எதிர்கொள்ளும்போது தங்களுடைய பாதையை நேர்வழியில் அமைத்துக்கொள்ள வழிகாட்டியாகவும் அமைகிறது.**

**இந்நூல் வெளியீட்டு நிகழ்வில்
திரு. ராஜ் ராஜரட்ணம் அவர்கள் நேரடியாகக் கலந்துகொண்டு
ஆற்றவுள்ள சிறப்புரையானது
பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.**




காலம் : 20.01.2024 சனிக்கிழமை
நேரம் : பி.ப 2.45 மணி
இடம் : ஹூவர் கலையரங்கம், மருத்துவப் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இந்நிகழ்வை நேரலையாக
ஐ.பி.சி தொலைக்காட்சி ஊடாகவும்
ஐ.பி.சி வலையொளியூடாகவும்
சமனற்ற நீதி என்ற முகநூல் வழியாகவும்
பார்வையிட முடியும்.

அனுசரணை
The Jaffna Teaching Hospital Foundation
synamon global

Live Streming
சமனற்ற நீதி
IBC தமிழ் TV & Youtube



# பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் லொறி சாரதி ஒருவர் பரிதாபப் பலி

## மக்களின் ஆர்ப்பாட்டத்தால் குருநாகலில் பதற்றம்



குருநாகல் – நாரமல்ல பிரதேசத்தில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் லொறி சாரதி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் உப பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் உத்தரவை மீறிப் பயணித்த லொறியை மடக்கிப் பிடித்து சோதனைக்கு உட்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் பொலிஸ் உத்தியோகத்தரின் துப்பாக்கி தவறுதலாக இயங்கியமையால் இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதனிடையே இந்தச் சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்குப் பதில் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய விசேட புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் குழுவொன்று சம்பவ இடத்துக்கு அனுப்பப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நாரமல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பெலஸ்ஸ வலங்கட பிரதேசத்தில் நேற்று இரவு இந்தத் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாரமல்ல பிரதேசத்தில் இருந்து கிரியுல்ல நோக்கிப் பயணித்து கொண்டிருந்த சிறிய ரக லொறி ஒன்றை நிறுத்துவதற்கு பொலிஸார் உத்தரவு பிறப்பித்த போதிலும் குறித்த லொறி நிறுத்தாமல் பொலிஸாரின் கட்டளையை மீறிப் பயணித்துள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தில் நாரமல்ல பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் கடமையில் ஈடுப்பட்டிருந்தனர் எனவும், அவர்கள் இருவரும் அவர்களின் தனிப்பட்ட வாகனத்தில் சிவில் உடையில் கடமையில் இருந்துள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உத்தரவை மீறிப் பயணித்த குறித்த லொறியைப் பின்தொடர்ந்த குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் அதனை மடக்கிப் பிடித்துள்ளனர். இதன்போது லொறியை பொலிஸ் அதிகாரிகள் சோதனைக்குட்படுத்துவதற்கு முயற்சித்தனர் எனவும், இதன்போது உப பொலிஸ் பரிசோதகர் லொறியின் சாரதியின் தலைப்பகுதியில் துப்பாக்கியை வைத்துள்ளார் எனவும், இந்தச் சந்தர்ப்பத்தில் துப்பாக்கி தவறுதலாக இயங்கியுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தின்போது படுகாயமடைந்த சாரதி நாரமல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் 41 வயதுடைய மஹரவிச்சிமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையாவார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அருகில் இருந்த பிரதேசவாசிகள் குறித்த பொலிஸ் அதிகாரிகளுக்குக் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளதுடன் அங்கு பதற்ற சூழ்நிலை ஏற்பட்டது. உயிரிழந்தவரின் உறவினர் மற்றும் பிரதேசவாசிகள் நாரமல்ல பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் பொலிஸ் நிலையத்தின் நுழைவாயிலையும் சேதப்படுத்தியுள்ளனர். எவ்வாறாயினும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், குறித்த பொலிஸ் அதிகாரிகள் இருவரின் கவனயீனம் காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும், இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

எவ்வாறாயினும் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் பணிப்புரையின் பேரில் குறித்த துப்பர்ககிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக விசேட புலனாய்வு பிரிவின் பொலிஸ் குழுவொன்றால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இப்பீடு வழங்குவதும் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது எனவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# யாழில் டெங்கால் இருவர் பலி!

**(ந.லோகதயாளன்)**

டெங்குக் காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட இருவர் உயிரிழந்துள்ளனர்.

அரியாலையைச் சேர்ந்த சிந்துஜன் (வயது 25) மற்றும் மல்லாவியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

காய்ச்சல் காரணமாக போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி பரிதாபகரமாக இருவரும் உயிரிழந்துள்ளனர்.

இருவரின் மரணத்துக்கும் டெங்கே காரணம் என்று பிரேத பரிசோதனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பளையில் 15 வயது சிறுமி வன்புணர்வு: பூசாரிக்கு 12 ஆண்டுகள் கடூழியச் சிறை



கிளிநொச்சி, பளை பிரதேசத்தில் 15 வயதான சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டை எதிர்நோக்கிய பூசாரி ஒருவருக்குக் கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி எம்.சஹாப்தீன் 12 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து நேற்று தீர்ப்பு வழங்கியுள்ளார்.

இந்தச் சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சிறுமிக்கு இழப்பீடாக இரண்டு இலட்சம் ரூபாவும், 10 ஆயிரம் ரூபா அபராதத்தையும் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சிறுமிக்குச் செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகை செலுத்தத் தவறினால், மேலும் இரண்டு ஆண்டுகளும், அபராதத் தொகை செலுத்தத் தவறினால் மேலும் ஆறு மாதங்களும் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

குற்றவாளியான பூசாரி கடந்த 2016 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 11 ஆம் திகதி சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார், சந்தேகநபரைக் கைது செய்து மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

அந்த நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்த வழக்கு, சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய கிளிநொச்சி மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.

சிறுமியின் சாட்சியம் மற்றும் விஞ்ஞான ரீதியான சாட்சியங்களின் அடிப்படையில் குற்றவாளி, குற்றத்தைச் செய்துள்ளார் என்பது தெளிவாக ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**உடப்பில் கரைவலை...**

மேற்படி சம்பவத்தில் வள்ளம் 3, சாலை வலை 2, புறவலை 1, இயந்திரப்படகு 1, கரைவலை 1, மீன்பிடிக்கும் சல்வா 1, கம்மான் கயிறு 15 போன்றவை எரிந்து நாசமாகியுள்ளன. இதில் ஒரு வள்ளம் முற்றாகவே எரிந்ததோடு, இயந்திரப் படகு ஒன்று முற்றாகவே எரிந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் சுமார் 2 கோடிக்கும் மேற்பட்ட தமது சொத்துக்களுக்கு இழப்பு ஏற்பட்டது என்று மீன்வாடி உரிமையாளரின் மகன் செ.சொக்கலிங்கசாமி தெரிவித்தார்.

இது சம்பந்தமாக உடப்பு பொலிஸில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்ட நிலையில், இன்று காலை உடப்பு பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பான பொறுப்பதிகாரி சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டு விசாரணை நடத்தி வருகின்றார்.

உடப்பில் இடம்பெற்ற தீ வைக்கப்பட்ட சம்பவங்களில் இது நான்காவது கரை வலை வாடியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

**முல்லையில்...**

முள்ளிவாய்க்கால் கடற்கரைப் பகுதியிலேயே இன்று இந்தச் சடலம் கரையொதுங்கியுள்ளது.

இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதி கடற்கரையில் தெப்பம் ஒன்று மிதந்து வந்த நிலையில் சடலமும் கரையொதுங்கி இருக்கின்றது.

தெப்பத்தில் உள்ள கேன்களில் இந்தியாவின் தெலுங்கு மொழிகள் எழுதப்பட்ட அடையாளங்கள் காணப்படுகின்றன.

சடலம் கரையொதுங்கியுள்ளமை தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸார் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்து நீதிவானை சம்பவ இடத்துக்கு அழைத்துச் சென்று சடலத்தை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

**கருணா என்ற...**

சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே கஜேந்திரகுமார் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த மாவீரர் வாரத்தில் கைது செய்யப்பட்ட மிஞ்சிய அரசியல் கைதிகள் மற்றும் சிறையில் இருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளர், அவரது மகன், ஜனநாயகப் போராளி அமைப்பின் நகுலேஸ் ஆகியோரைச் சிறையில் சந்தித்தேன்

மாவீரர்களை நினைவேந்திய வர்களைக் கைது செய்து அவர்களைப் பழிவாங்கும் கோணத்தில் இலங்கை அரசு செயற்படுகின்றது. அரசின் இந்தச் செயற்பாடுகளை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இந்த விடயங்களை வருகின்ற மார்ச் மாதம் இடம்பெறும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் அம்பலப்படுத்தி அதனை நேரடியாகப் பதிவு செய்வதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியாக வேண்டும் என்பதே ரணில் விக்கிரமசிங்கவின் கடைசி கனவு. அந்தக் கனவு சாத்தியமற்றது. ஏனென்றால் இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகள் மூன்றாகப் பிரியும். அதனால் ரணிலுக்கு வாக்குகள் குறையும். அவர் தனிநபராக – ஐக்கிய தேசியக் கட்சியினுடைய ஒருவராக இருந்தால் சிலவேளை அவருக்கு வாக்குகள் விழும் வாய்ப்புகள் இருந்திருக்கலாம். ஆனால், இரண்டரை வருடங்களுக்கு முன்னர் சிங்கள மக்கள் விரும்பி வாக்களித்த கோட்டாபய ராஜபக்ஷவை அதே மக்கள் துரத்தி வீட்டுக்கு அனுப்பியதன் பிறகு அந்தத் தரப்பை அரசியலில் உயிரோடு வைத்திருப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க செய்கின்ற இந்தச் செயற்பாடுகளைத் தெற்கில் உள்ள மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

ரணிலுக்கு இது தெரியும். அவர் தேர்தலில் வெல்வதற்காகத் தமிழர்களை மீண்டும் ஒருமுறை ஏமாற்ற வேண்டும் என்ற தேவை இருக்கின்றது.

இந்த இரண்டரை வருடங்களில் ரணில் கோட்டாவை விட மிக மோசமாக ஜனநாயகத்தை மறுக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றார்." – என்றார்.

# இந்திய மீனவரைக் கட்டுப்படுத்த இலங்கை அரசு ஏன் தவறுகிறது?

**வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் ஆலம் கேள்வி**

(வாஸ் கூஞ்ஞ)

இந்திய மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்த ஏன் அரசு தவறுகிறது என்ற கேள்வி மன்னார் மாவட்ட மீனவர்கள் மத்தியில் எழுந்துள்ளது. எனினும் இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகையை கட்டுப்படுத்த முடியவில்லை என்பதை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்கத்தின் செயலாளரும் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளருமான என்.எம். ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று வியாழக்கிழமை (18) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளருமான என்.எம். ஆலம் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை கடந்த 15 வருடங்களுக்கு மேலாக அதாவது யுத்தத்துக்கு முன்னர் இருந்து தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்.



இந்திய மீனவர்களின் வருகையைக் கட்டுப்படுத்த ஏன் அரசு தவறி விடுகின்றது என்ற கேள்வி மன்னார் மாவட்ட மீனவர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

பாதிக்கப்பட்ட எமது மீனவர்கள் முறைப்பாட்டை முன்வைக்கின்ற போது கண்துடைப்புக்காக ஒரு சில படகுகளைக் கடற்படையினர் பிடிக்கின்றனர்.

எனினும் தொடர்ச்சியாக இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகையும் ஏனைய செயற்பாடுகளால் வட பகுதி மீனவர்கள் தொழில் இழப்பை சந்திப்பதோடு மீன்பிடி உடமைகளையும் இழந்து வருகின்றனர்.

இவற்றை இலங்கை அரசும் கண்டுகொள்ளாமல் இருக்கின்றது என்பது எமக்கு கவலை தருகிறது.

குறுகிய எல்லைப் பரப்பை பாதுகாக்க முடியாமல் இருக்கின்ற இந்த அரசு, வெறுமனே எங்களுக்கு அப்பால் இருக்கும் கடல் பிரதேசத்தையும் கடல் வணிக நடவடிக்கைகளையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சம்மந்தமே இல்லாத நாடுகளுக்கு திட்டங்களையும் நிதியுதவிகளையும் வழங்க வாக்குறுதி வழங்கியுள்ளது.

ஆனால் அழிக்கப்பட்ட வடமாகாணம் எவ்வித நிதி வசதியும் இன்றி இங்குள்ள பாடசாலைகளில் எவ்வித முன்னேற்றமும் இல்லாமல் எவ்வித தொழில் நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாத நிலையில் இருக்கின்றது.

சம்மந்தமே இல்லாத நாடுகளுக்கு உதவிகளை மேற் கொள்ள ஜனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஒரு வகையில் நாங்கள் பாராட்டினாலும் எமது பிரச்சினைகளை தீர்த்து வைத்த தன் பின்னர் அதனை அவர் முன்னெடுக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக உள்ளது.

இந்திய மீனவர்களின் வருகையால் எமது மீனவர்களுக்கு ஏற்பட்ட அழிவுகளுக்கு இதுவரை இழப்பீடுகள் வழங்காத நிலையில் மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் உள்நாட்டு மீனவர்களையும் உள்நாட்டு வளங்களையும் பாதுகாக்க ஜனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.- என்றார்.

# விவசாயமே சிறப்பான தொழில் என்கிறார் மன்னார் அரச அதிபர்



(வாஸ் கூஞ்ஞ)

தொழில்களிலே மிகவும் சிறந்த தொழில் விவசாயமே. சூரியனும் உழவர்களும் தகுந்த முறையில் செயல்படாவிட்டால் மனித வாழ்வே அஸ்தமித்து விடும் என்று மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகவேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலக ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட செயலகத்தில் சூரியப் பொங்கலும் உழவர் கௌரவிப்பும் புதன்கிழமை (17) மாவட்ட செயலாளர் க.கணகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றன.

இதன்போது மாவட்ட செயலாளர் க.கணகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமிழர்களின் ஒரு விழாவாக தைப் பொங்கலும் கொண்டாடப்ப டுகின்றது. இவ்விழாவானது எமக்கு உணவு வழங்கும் உழவர்களுக்கும் இதற்கான நல்ல காலநிலையை தரும் சூரியனுக்கும் நன்றி தெரிவிக்கும் ஒரு நிகழ்வாகவே திகழ்கின்றது.

தொழில்களிலே மிகவும் சிறப்பானத் தொழில் விவசாயத் தொழில் ஆகும். யாராக இருந்தாலும் விவசாயிகளிலேயே தங்கி வாழ்கின்றனர்.

விவசாயிகள் தங்கள் தொழிலைக் கைவிட்டால் நாம் எவ்வாறான பிரச்சினைகளுக்கு தள்ளப்படுவோம் என்பது யாவருக்கும் தெரியும்.

தற்போது மரக்கறிகளின் விலையேற்றம் உச்ச நிலையை அடைந்துள்ளதும் நாம் அறிவோம். சூரியனும் விவசாயிகளும் கைகொடுக்காமையால்தான் இந்த நிலை உருவாகியுள்ளது.-என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# மீண்டும் அறகலயவா?

'வாராமல் வந்த வாழ்வு போல' கிடைத்த ஜனாதிபதிப் பதவியை சரிவர அனுபவித்து முடிப்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மும்மரமாக இருப்பார் போலத் தெரிகின்றது.

விழுந்தடித்து வெளிநாட்டுப் பயணங்களை மாறி மாறி அவர் மேற்கொள்வதைப் பார்க்கும் போது - சர்வதேச மாநாடுகளில் கலந்து கொண்டு கருத்துக்களை உபதேசிக்கின்ற மையை நோக்கும்போது - கிடைக்கும் வாய்ப்பில் சர்வதேச மட்டத்தில் தனது ஆளுமை முத்திரையை பொறித்து விட்டுச் செல்வதில் அவர் குறியாக இருக்கின்றாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

இருக்கலாம். நாட்டின் ஜனாதிபதிப் பதவியில் தொடர முடியாத நிலைமை தமக்கு வரும் செப்டெம்பருடன் ஏற்பட்டு விட்டால், அதன்பின்னர் சர்வதேச மட்டத்திலான உயரிய கட்டமைப்பு ஒன்றில் தனித்துவமான பதவி எதையாவது பெற்றுக் கொண்டு நிரந்தரமாக 'செட்டிலாகி' விடுவதற்கு வசதியாக முற் கூட்டியே சர்வதேச மட்டத்தில் முத்திரை பதிப்பது அவசியமல்லவா?

சர்வதேச சந்திப்புகள், மாநாடுகளுக்கு விழுந்தடித்துக் கொண்டு ஓடி, அங்கெல்லாம் தத்துவ முத்துக்களை அவர் உதிர்ப்பதை பார்த்தால் இப்படி ஓர் உள்சூக்குமம் இருக் குமோ என்று சந்தேகம் எழுகின்றது. அது நியாயமான சந்தேகம்தான்.

அப்படி அவர் வெளிநாட்டு பயணங்களில் 'பிஸி'யாக இருக்க, இங்கு நாடு வேறு சிக்கல் களில் மாட்டிக்கொள்ளத் தொடங்கியுள்ளது.

ராஜபக்ஷக்களின் ஆட்சி அதிகாரத்துக்கு எதிராக வெடித்த மக்கள் எழுச்சி - 'அறகலய' போராட்டம் - ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதிப் பதவியைத் தேடி தந்திருக்கின்றது. ஆட்சி மாற்றத்தின் பின்னர், அதுவரை அரசியல் குப்பை கூடைக்குள் வீசப்பட்டிருந்த தமக்கு அதிகாரத்தைப் பெற்றுத் தந்த அறகலயப் போராட்டம் மீதே தமது புதிய அதிகார வலுவைப் பிரயோகித்தார் ரணில் விக்கிரம சிங்க.

தாம் தமது இரும்புக் கரம் கொண்டு அறகலயப் போராட்டத்தை அடக்கி விட்டார் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமக்குள் இறும்பூதெய்தி, மகிழ்ச்சியில் திளைத்து நிற்கின்றார்.

ஆனால் நிலைமை இப்போது அப்படியல்ல. மீண்டும் அறகலய போராட்டம் துளிர்த்து முனைப்பாக மூன்று இலைகள் விடக்கூடிய ஏது நிலைகள் தென்படுகின்றன.

ஒருபுறம் பல்கலைக்கழக மாணவர் போராட்டம். மறுபுறம் பல்கலைக்கழக ஊழி யர் சங்கம் முழு அளவிலான தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு தயாராகி வருவதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

சுகாதாரத் துறையிலும் அதுதான் நிலைமை. அரச மருத்துவர்கள் அல்லாத மற்றைய அரச சுகாதாரத் துறையினர் எல்லோரும் அரசுக்கு எதிராக ஒன்று திரண்டு வருகின்றனர். இந்த வாரம் முற்பகுதியில் சில அடையாள நடவடிக் கைகளை அவர்கள் பிரதிபலித்துக் காட்டினர்.

அடுத்த கட்டத்தை பேரெடுப்பில் - ஆட்சியாளர்களுக்கு அதிர்ச்சி தரும் விதத்தில் - முன்னெடுக்க அவர்கள் தயாராகி வருகின்றனர் என்றும் தகவல்.

ஏற்கனவே மின்சார சபை ஊழியர்கள் தங்கள் புஜபல பராக்கிரமத்தை காட்டும் விதத்தில் தங்கள் தொழிற்சங்கக் கைவரிசை ஆரம்பித்து விட்டனர். எரிபொருள், மின் சக்தி, உயர் கல்வி, மருத்துவ மற்றும் சுகாதாரத் துறை என்று வாழ்வியலின் பிரதான அம்சங்கள் எல்லாவற்றிலும் சம்பந்தப்பட்ட துறையினரின் அதிர்ச்சி - எரிச்சல் - சீற்றம் என்பவை தொழிற்சங்க வடிவங்களில் மெல்ல மெல்லத் தலைகாட்டத் தொடங்கி விட்டன.

பல்கலைக்கழக மாணவர்களின் போராட் டத்தைக் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி, தண்ணீரைத் தரையாகப் பீச்சி அடித்து, கலைக்கும் தீவிரப் போக்கு அடக்குமுறை தினசரிக் கதையாகி வருகின்றது. மிக மோசமான விலைவாசி உயர்வு, வாழ்க்கைச் செலவு எகிறல் போன்றவற்றினால் நாட்டின் மக்கள் பெருங்குழப்பத்தில் - ஆவேசத்தில் - எரிச்சலில் மூழ்கி இருக்கையில், இப்படி அரச துறைகளில் தொழிற்சங்கப் போரா ட்டங்கள் மெல்லத் தலையெடுத்து, இப்போது பூதாகர உருவெடுக்கும் ஏது நிலைமை தென்படுகிறது.

வேறுபட்ட பல முனைகளிலும் உருவாகும் இந்த அதிருப்தி உணர்வு - எரிச்சல் போக்கு - அதன் பொதுவான இயல்பின் அடிப்படையில் ஒன்றுபட்டு ஓர் உணர்வாகப் பீறிட்டுக் கிளம் பும் வாய்ப்புகள் - சந்தர்ப்பங்கள் - தாராளமாக ஏற்பட்டு உள்ளன.

'ரோம் பற்றி எரியும்போது பிடில் வாசித்த நீரோ மன்னன் போல' நாட்டில் மீண்டும் அறகலய போன்ற போராட்டங்கள் வெடிப் பதற்கான ஏது நிலைகள் தென்படும் சமயத்தில் நாட்டின் ஜனாதிபதி சர்வதேச மாநாடுகளுக்கு விசிட் போய்க் கொண்டிருக்கிறார்.

நிலைமையின் மோசமான விளைவுகள் விபரீதமாகலாம். யார் சொல்லியும் கேட்காத மனிதர் என்று பெயரெடுத்துள்ளார் ரணில் விக்கிரமசிங்க. இந்த விடயத்தைச் சுட்டிக் காட்டும் தரப்புகளின் கருத்துக்களையும் கூட நிராகரித்து, தான் என நாண்டு பிடிப்பார் அவர்.

விளைவை அனுபவிக்கும் போது விபரீதம் அவருக்குப் புரியவரும். ஆனால் அப்போது காலம் பிந்தி விட்டிருக்கும்.




# முஸ்லிம் எயிட் நிறுவனத்தால் 237 மாணவர்களுக்கு உதவி

(ஹஸ்பர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் எயிட் நிறுவனத்தால் கிண்ணியா வலயக் கல்வி பிரிவுக்கு உட்பட்ட தம்பலகாமம் பிரதேச செயலர் பகுதியில் உள்ள அல்-ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களுக்கு கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

பாடசாலையின் அதிபர் என்.எம். அஹமட் நஷ்ரப் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இதில் 237 மாணவர்களுக்கு தலா 8 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் கல்வியை விருத்தி செய்ய ஒரு உந்து சக்தியாக இது அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வியை மேம்படுத்த முஸ்லிம் எயிட் கடந்த காலம் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

நிகழ்வில் கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ. நசூஹர்கான், முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.சி. ஃபைசர் கான், அல்-ஹாஜ் நவாஸ், அல்-ஹாஜ் அஜ்வர்தீன், முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் கல்வி அபிவிருத்திக்கான நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் முனீர் முஸ்தபா, கள உத்தியோகத்தர் றமீஸ் உள்ளிட்ட முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நஷ்ட ஈட்டை விரைவில் வழங்குங்கள்

## கமத்தொழில் அமைச்சரிடம் ஹரீஸ் எம்.பி கோரிக்கை

(நூருல் ஹுதா உமர் )

அண்மையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் வெள்ளநீரை கட்டுப்படுத்த அணைக் கட்டுக்களை திறந்தமையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் பாதிக்பட்டுள்ள விவசாயிகளுக்கு விரைவில் நஷ்ட ஈட்டைப் வழங்குங்கள்.

கிழக்குமாகாண அதிலும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் பல ஆயிரக் கணக்கான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு விவசாயிகள் செய்வதறியாது திணறி வருகிறார்கள்.



இவர்களுக்கு உரிய நிவாரணத்தை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம். ஹரீஸ் நேற்று (18) கமத்தொழில் , வனசீவராசிகள் மற்றும் வளங்கள் வனப்பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீரவை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது அம்பாறை மாவட்ட விவசாயிகள் வெள்ளத்தால் அடைந்துள்ள நஷ்டங்கள் தொடர்பில் எடுத்துக் கூறினார்.

விவசாய நிலங்கள் வெள்ளத்தில் சிக்குண்டு வேளாண்மை மற்றும் மரக்கறி செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் விளக்கினார்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழுமையான நஷ்டஈட்டை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரை கேட்டுக்கொண்டார்.

அம்பாறை மாவட்ட விவசாயிகளின் பிரச்சினைகளை கேட்டறிந்த அமைச்சர் மஹிந்த அமரவீர, மிகத்துரிதகதியில் விவசாயிகளுக்கு நஷ்ட ஈட்டைப் பெற்றுக் கொடுக்க தான் நடவடிக்கை எடுப்பார் என்று உறுதியளித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித் துள்ளார்.



# அனர்த்தம் ஏற்பட்ட பகுதிகளில் மக்கள் சிரமதான நடவடிக்கை!

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாலம்போட்டாறு கிராம சேவகர் பிரிவில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்ட இடங்களில் புனரமைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இனிவரும் காலங்களில் அனர்த்தம் ஏற்படாதவாறு முற்காப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கு இணங்க இடம்பெற்ற சிரமதானப் பணியில் பொது மக்களும் இணைந்து கொண்டனர். சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் பாலம்போட்டாறு கிராம சேவகர் பிரிவு பாதிக்கப்பட்டிருந்தது.




இதனை எதிர்வரும் காலங்களில் குறைக்கும் நோக்குடன் 120 குடும்பங்களின் நன்மை கருதி பிரதேச செயலாளரின் வேண்டுகோளுக்கிணங்க தம்பலகாமம் பிரதேச சபை மற்றும் பொது மக்கள் இணைந்து சிரமதான அடிப்படையில் வடிகான்கள் சுத்தம் செய்யப்பட்டன.

இதன் போது கலந்து கொண்ட மக்களுக்கு அரிசி பொதிகள் வழங்கப்பட்டன.வன்னி ஹோப் நிறுவனத்தால் இவை வழங்கப்பட்டன.

# மட்டக்களப்பு கைத்தறி நிறுவுனரால் உணவுப் பொருள்கள் வழங்கி வைப்பு

(பழுவூரான்)

மட்டக்களப்பு ஆதித்தி கைத்தறி நெசவு தொழிற்சாலை நிறுவுனர் திருமதி கீதா சுதாகரன் மற்றும் மட்டக்களப்பை சேந்த நலம் விரும்பி ஒருவரின் அனுசரணையுடன், அண்மையில் பெய்த கடும் மழை காரணமாகப் பாதிக்கப்பட்டு, இடைத்தங்கல் முகாமில் தங்கி, வீடு திரும்பிய சித்தாண்டி மற்றும் முறக்கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு தொகுதி உலர் உணவுப் பொதிகள் வழங்கபப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் வாழ்வாதாரமற்ற குடும்பங்களுக்கும், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கும் இவை வழங்கப்பட்டன.






# சீனாவில் இடம்பெறும் செயலமர்வில் தென் கிழக்கு பல்கலை மாணவர்கள்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தென் கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் சீனாவின் ஷென்சென் நகரில் உள்ள ஷென்சென் உயர் தொழில்நுட்ப நிறுவகத்தில் நடைபெறும் "காலநிலை மாற்றத்துக்கான நீர் மேலாண்மை" குளிர்கால செயலமர்வில் பங்கேற்றுள்ளனர்.

தென் கிழக்கு பல்கலைக்கழகம் உள்ளிட்ட 6 நாடுகளில் உள்ள 11 பல்கலைக் கழகங்களில் இருந்து 40 பட்டதாரி மாணவர்கள் இந்தச் செயலமர்வுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தச் செயலமர்வு ஜனவரி 8 ஆம் திகதி ஆரம்பமாகியது. இன்று 19 ஆம் தேதி வரை இரண்டு வாரங்களுக்கு இடம்பெறும்.

நோர்வே, போலந்து, ஜேர்மனி, இலங்கை, மங்கோலியா மற்றும் சீனா ஆகிய ஆறு நாடுகளில் உள்ள 11 உயர்கல்வி நிறுவனங்களில் பேட்னர் நிறுவனமாக, இலங்கையின் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம், 2011 ஆம் ஆண்டு முதல் 'CCWATER' என்ற மூன்றாண்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

புதிய புதுமையான டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்தி இலங்கையில் நிலையான மற்றும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதில் கற்கவும், பகிர்ந்து கொள்ளவும், மாற்றத்தை ஏற்படுத்தவும், இந்த குளிர்கால செயலமர்வானது சர்வதேச அரங்கில் ஒரு வாய்ப்பை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.



# திருமறைக் கலாமன்றத்தின் கலை நிகழ்வுகள் நாளை

தைத்திருநாளை சிறப்பிக்கும் வகையில் திருமறைக் கலாமன்றத்தால் வருடந்தோறும் நடத்தப்பட்ட வருகின்ற பொங்கல் விழாவின் முதலாவது பகுதியான பொங்கல் வைபவம் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்றது.

அதன் இரண்டாவது பகுதியான கலை நிகழ்வுகள் நாளை (20) சனிக்கிழமை மாலை இல.238,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் கலந்து கொள்ளவுள்ளார்.

கலை நிகழ்ச்சிகளாக கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் கிராமிய நடனம், திருமறைக் கலாமன்ற இசைக் கலைஞர்களின் பொங்கல் பாடல்கள், மன்ற நாடகப் பயிலக மாணவர்களின் 'இதுவும் கடந்து போகும்' நாடகம் என்பவற்றுடன் ஜொணி மதுரநாயகம், தர்மினி றஜீபன் ஆகியோரின் கவிதை நிகழ்வுகளும் இடம்பெறும்.



# யாழ். மாவட்டத்தில் மாற்றுப் பயிர்; பயிரிடுவது தொடர்பில் ஆராய்வு!

## விவசாய அமைச்சில் நேற்று நடைபெற்றது

(த.சுபேசன்)

நாட்டில் மரக்கறி விலையேற்றம் காணப்பட்டுவரும் நிலையில் மாற்றீட்டுப் பயிர்ச் செய்கைகளை யாழ். மாவட்டத்தில் முன்னெடுப்பது சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதனின் கோரிக்கைக்கு அமைய விசேட மூலோபாய கலந்துரையாடல் நேற்று (18) வியாழக்கிழமை விவசாய அமைச்சில் இடம்பெற்றது.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் தற்போது நிலவும் மரக்கறி தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது குறித்த மரக்கறிகளை யாழ். மாவட்டத்தில் இருந்தும் பருவகால அடிப்படையில் உற்பத்தி செய்வதன் ஊடாக இவ்வாறான தட்டுப்பாடுகள் மற்றும் விலைத் தளம்பலை தவிர்க்க முடியும் என்று யோசனை முன்வைக்கப்பட்டது.

இதற்கமைய இந்த ஆண்டில் புதிய திட்டங்களை உருவாக்குவது தொடர்பில் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இவற்றுடன் யாழ்ப்பாணத்துக்கே உரிய சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் உற்பத்தியை மேம்படுத்துவது தொடர்பாகவும், யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் திராட்சைப் பழங்களை கொண்டு பழச்சாறு உற்பத்தியை யாழ். மாவட்டத்திலேயே மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் விவசாய அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்படும் இதர திட்டங்கள் ஊடாக விவசாய உற்பத்திகளை பெறுமதி சேர் உற்பத்திகளாக மாற்றுவது தொடர்பாக விவசாய அமைச்சு கவனம் செலுத்த உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இறுதியில் விவசாய அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த போது, விவசாயிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டன.

விவசாய நிலங்களுக்கு குரங்குகள், கட்டாக்காலி கால்நடைகளால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கான வேலிகள், வாயுத் துப்பாக்கி உள்ளிட்டவற்றை வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்டது. யாழ். மாவட்ட விவசாயிகளுக்கான விவசாய மின் இணைப்புக்கு உரிய கட்டணத்தில் மானியம் வழங்குவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று அமைச்சர் இந்தச் சந்திப்பில் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில், உள்ளூர் விதைகளைப் பாதுகாக்கும் தன்மை விவசாயிகள் மட்டத்தில் குறைவடைந்து செல்வதால் விதைகளை இறக்குமதி செய்யும் நிலை அதிகரித்து செல்வதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் விதைகள் விவசாயிகளுக்கு தேவையான காலத்தில் வழங்கப்படாததால், நாட்டில் உணவுத்தட்டுப்பாடுகள் ஏற்படுவதாகவும், அதனைப் போக்க உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதால் உள்ளூர் விவசாயிகள் பாதிப்பை எதிர்கொள்கிறார்கள் என்பதும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

பயறு, உளுந்து உள்ளிட்ட சிறு தானிய உற்பத்திகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான விதைகள் பெரும்போக அறுவடை முடிவடைந்தவுடன் வழங்கப்படவேண்டிய நிலையில் அவை காலம் தாழ்த்தி வழங்கப்படுவதால் கோடை காலத்தில் நாட்டில் உளுந்து, பயறுக்கான தட்டுப்பாடு உருவாகும் நிலை தொடர்பில் இக்கூட்டத்தில் விவரிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு இறுதியில் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு விநியோகிக்கவென கொண்டுவரப்பட்ட விதை உருளைக்கிழங்குகள் பாவனைக்கு உதவாத நிலையில் அழிக்கப்பட்டமையை சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், இதற்கான மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதன்போது கருத்து தெரிவித்த மாகாண விவசாய பணிப்பாளர், யாழ்ப்பாணத்தில் விவசாயத்துக்கு தேவையான விதைகளை பாதுகாத்து பராமரிக்கக்கூடிய வகையில் குளிரூட்டப்பட்ட களஞ்சியமொன்றை அமைப்பதால், விவசாயிகளுக்கு உரிய காலத்தில் விதைகளை வழங்க முடியும் என யோசனை முன்வைத்தார்.

இதற்காக அச்சுவேலியில் இருக்கும் களஞ்சியத்தை குளிரூட்டப்பட்ட களஞ்சியமாக மாற்றியமைக்க முடியும் எனவும் யோசனை தெரிவித்தார். இதனை உடனடிக் கவனத்தில் எடுத்துக்கொள்வதாக விவசாய அமைச்சர் தெரிவித்தார்.

இவற்றுடன் விவசாய கிணறுகள், குளங்கள், விவசாய வீதிகளை புனரமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டது. யாழ். மாவட்டத்தில் விவசாய மாதிரிக் கிராமம் ஒன்றை உருவாக்கி அனைத்து வகையான உணவு விவசாய, கால்நடை வளர்ப்பு, ஏற்றுமதி விவசாய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான யோசனையும் முன்வைக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில், விவசாய அமைச்சின் கீழ் இயங்கும் திணைக்களங்களின் தலைவர்கள், மாகாண திணைக்கள தலைவர்கள், அமைச்சின் செயலாளர்கள், மாவட்ட மற்றும் பிராந்திய விவசாய அதிகாரிகள், விவசாய அமைச்சின் திட்டப்பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.




# உரிமைக்கான குரல்!
# கொடுமைக்கு எதிரான குரல்!!
# 2001 பொங்கு தமிழ் பிரகடன குரல்!!!

■ **நவீனன்**

ஈழத்தமிழர் போராட்டத்தின் நியாயங்களை உலக அரங்கில் முன்வைப்பதே பொங்கு தமிழ் நோக்கம் ஆகும். இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு இருந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் இந்த நிகழ்வு 2001 இல் முதன் முறையாக நிகழ்த்தப்பட்டது.

தன்னாட்சி உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் போன்ற மூன்று வேண்டுகோள்கள் முன் வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து ஈழத்தின் பிற பகுதிகளிலும், புகலிட நாடுகளிலும் இந்த நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

சர்வதேச ரீதியில் பொங்கு தமிழ்

பொங்கு தமிழ் உலகத் தமிழர்கள் தமது உரிமைகளுக்காகவும், கொடுமைகளுக்கு எதிராகவும் தமது குரலை வெளிப்படுத்தும் நிகழ்வாகும். பல்வேறு சுதந்திரங்கள் உறுதி செய்யப்பட்ட மேற்கு நாடுகளில் வெளிவரும் ஒரு குரல்.

தமிழர்கள் கொடுமைகளுக்கு எதிராகத் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் ஒரு அரங்காக பொங்கு தமிழ் நிகழ்வுகள் சர்வதேச ரீதியில் நடைபெற்றன.

தமிழ் மக்களின் அபிலாசைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம் மற்றும் தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கட வேண்டும் என கோரிக்கைகளை வலியுறுத்தி 2001 ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி இராணுவ அடக்கு முறைக்கு மத்தியில் யாழ். பல்கலை கழகத்தில் மக்கள் பேரெழுச்சியாக பொங்கு தமிழ் பிரகடனம் செய்யப்பட்டது.

பொங்கு தமிழ் பிரகடனத்தை நினைவுபடுத்தும் முகமாக அப்போதய யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நினைவுத் தூபியும் திறந்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பொங்கு தமிழ் பிரகடனம், ஈழத்தில் இராணுவ அடக்கு முறைக்கு எதிரான மக்கள் பேரெழுச்சியின் உச்சமே ஆகும்.



**உரிமைக்கான குரல் !**

“ஈழத் தமிழ் மக்களின் சுதந்திர தாயகத்துக்கான அடிப்படை அபிலாஷைகளையும் நியாயங்களையும் சர்வதேசத்துக்கு ஒரே குரலில் தமிழ் மக்கள் வெளிப்படுத்திய தளமாக பொங்கு தமிழ் அமைந்தது.

இலங்கை இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்த தமிழரின் மரபு வழித் தாயகமும், அதனால் சிதைக்கப்பட்டிருக்கும் தன்னாட்சி உரிமையையும் வேண்டி நின்ற தமிழ் மக்கள், தமிழ் தேசியத்தின் பால் தாம் கொண்டுள்ள ஆழமான விடுதலை உணர்வை வெளிக் கொணர்வதற்கும், வலியுறுத்துவதற்குமாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் யாழ். பல்கலைக் கழகத்தில் மக்கள்

(13ஆம் பக்கம் பார்க்க)



# உரிமைக்கான குரல்!
## கொடுமைக்கு எதிரான குரல்!!
## 2001 பொங்கு தமிழ் பிரகடன குரல்!!!

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேரெழுச்சியாக திரண்ட நிகழ்வே ‘பொங்கு தமிழ்’ ஆகும்.

இதனைத் தொடர்ந்து, ஈழத்தின் அனைத்து மாவட்டங்களிலும், புகலிட தேசங்களிலும் பொங்கு தமிழாய் எம் மக்கள் விடுதலைக்காய் பேரெழுச்சி கொண்டனர்.

ஈழப்போரின் உச்சக்கட்ட காலங்கலான 2001 இல் யாழ். மண்ணில் இராணுவத்தினரின் அடக்கு முறைகளையும், கொலை அச்சுறுத்தல்களையும், வீதி மறிப்புக்களையும், கெடுபிடியான சோதனை நடவடிக்கைகளையும் தாண்டி, குடியிருப்புக்களின் மதில்களால் பாய்ந்தும், குறுக்கு பாதைகளாலும் இளைஞர்கள், முதியவர்கள், மதகுருமார், பெண்கள், மாணவிகள் என்ற பாகுபாடின்றி திரண்ட பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களுடன் பேரெழுச்சி கொண்டு 2001 ஆம் ஆண்டு பொங்கு தமிழ் பொங்கிப் பிரவாகித்து நின்றது.

இலங்கைஅரசின்கொடுமைகளுக்கு எதிராகவும் தமிழ் தேசத்தின் திட்டமிட்ட அழிப்புக்கு எதிராகவும் அவற்றைத் தகர்த்தெறிந்து எழுச்சி கொண்டு தமிழ் மக்கள் தமது உரிமைக் குரலை உயர்த்தி வெளிப்படுத்திய எழுச்சி மிக்க பிரகடனமே பொங்கு தமிழாகும்.

இந்த நிகழ்வு நடைபெற்று 23 ஆண்டுகள் நிறைவடைந்தன. எனினும் பேரினவாத அடக்கு முறைக்குள் சிக்குண்டு எமது தேசத்தின் தாங்கு தூண்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழர் தேசத்தின் இருப்பைப் பாதுகாக்க பின்வரும் தீர்மானங்களை வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழகத்தில் மக்கள் பேரெழுச்சியாக ‘பொங்கு தமிழ்’ பிரகடனம் அறைகூவப்பட்டது.

1. வடக்கு கிழக்கு இணைந்த தமிழரின் தாயகம் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

2. தமிழரின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

3. தமிழ் தேசமும் அதன் தனித்துவமான இறைமையும் அங்கீகரிக்கப்படல் வேண்டும் என வலியுறுத்தி இப்பிரகடனம் வெளியிடப்பட்டது.

### பிரகடனத்தின் 23 ஆம் ஆண்டு

யாழ். பல்கலைக்கழகத்தின் பொங்கு தமிழ் பிரகடனத்தின் 23 ஆம் ஆண்டு நிறைவு நாள் 17.01.2024 கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், மாணவர்கள், இணைந்து பல்கலைக்கழக கலைப்பீட வளாகத்திற்குள் அமைந்துள்ள பொங்குதமிழ் நினைவு தூபி முன் கூடி பொங்குதமிழ் பிரகடன நிறைவு நாளை நினைவு கூர்ந்திருந்தனர்.

இதன் போது, யாழ். பல்கலைக்கழகத்தில் தொடர்ந்தும் மேற்கொண்டு வந்த தமிழ் தேசிய நிலைப்பாடு தற்போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது என்று மாணவர் ஒன்றியம் கூறியுள்ளது.

இந்த நிறைவு நாளில், பொங்கு தமிழ் பிரகடனம் வாசிக்கப்பட்டது. இந்த எழுச்சி நிகழ்வில் வைத்து தமிழ் மக்களின் அபிலாசைகளான சுயநிர்ணைய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ் தேசியம் என்பவை அங்கிகரிக்கப்பட வேண்டும் என்பவை பொங்கு தமிழ் பிரகடனமாக அறிவிக்கப்பட்டது.

இரண்டு தசாப்தங்கங்களை கடந்த நிலையிலும் பொங்கி வழிந்த பொங்கு தமிழ் பிரகடனம் ஈழத்தமிழரின் விடுதலை வேட்கையை இன்னமும் ஓர்மத்துடன் பேணி வருகிறது.





# மறைந்த நடிகர் விஜயகாந்தின் மனைவிக்கு ஆறுதல் கூறிய ஹக்கீம்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான றவூப் ஹக்கீம் மறைந்த நடிகர் விஜயகாந்தின் வீட்டுக்கு சென்று அவரின் மனைவிக்கு ஆறுதல் கூறினார்.

இலங்கையிலிருந்து சென்ற றவூப் ஹக்கீம் சென்னை சாலிகிராமத்தில் உள்ள அவரது இல்லத்துக்கு நேற்று முன்தினம் (17) புதன் கிழமை சென்று அவரது மனைவி பிரேமலதா விஜய காந்த்தைச் சந்தித்து ஆறுதல் கூறி நினைவு கூர்ந்தார்.



# கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தால் வாகனங்கள் பகிரங்க ஏலத்தில்!

## நீதிமன்ற பதிவாளர் அறிவிப்பு

கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன என்று நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான வாகனங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9 மணிக்கு கிளிநொச்சி மேல் நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏல விற்பனைக்கு உட்படுத்தப்பட உள்ள வாகனங்களை உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னர் தமது கோரிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

அத்துடன் வாகனங்களை ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னர் பார்வையிட முடியும் என்றும் ஏல விற்பனையில் பங்கு பற்றுபவர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களுடன் வருகை தருதல் வேண்டும் என்றும் பதிவாளர் அறிவித்துள்ளார்.




# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு லயன்ஸ் கழகத்தால் மருத்துவ உபகரணம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வாழைச்சேனை நகர லயன்ஸ் கழகத்தால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன. ஊசிகள் மற்றும் குளுக்கோ மீற்றர் பரிசோதனை துண்டுகள் போன்ற பொருள்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வைத்தியர்கள், தாதி உத்தியோஸ்தர்கள் மற்றும் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.




# கவிதை நூல் வெளியீட்டு விழா!

கவிதாயினி கே.வசந்தகுமாரி எழுதிய "தவங்களெல்லாம் வரங்களாவதில்லை" கவதை நூல் வெளியீட்டு விழா நாளை (20) சனிக்கிழமை மாலை 4 மணிக்குக் கொழும்பு – 07 விகார மஹா தேவி பூங்கா முன்பாக அமைந்துள்ள ஜே.ஆர். ஜெயவர்தன கலாச்சார மண்டபத்தில் சக்தி தொலைக் காட்சி சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை கஜமுகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தமிழ் முற்போக்கு கூட்டணி அமைப்பின் தலைவர் மனோ கணேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் நூலின் முதல் பிரதியை இலங்கை பொன்மனச் செம்மல் தாஜ்மஹான் பெற்றுக் கொள்வார்.

பிரபல பாடகர் இலங்கை இசை முரசு கலைக் கமல்,தேசமாண்ய சுதர்ஷன கமகே, இலங்கை நெய்னார் காப்பகத் தலைவர் இம்ரான் நெய்னார் தேசபந்து சுசந்த அபேவர்தன, தொழில் அதிபர் சுபாஷ் சுந்தரராஜ், ரகு இந்திரகுமார் தொழில் அதிபர் தம்பாப்பிள்ளை பிரமேந்திரராசா, மற்றும் பிரபலங்களான வேவாயுதம் ராமர், ஆ.ஹறிதாஸ் கண்ணா, வீரகேசரி பிரதம ஆசிரியர் ச.ஸ்ரீ கஜன், சுயாதீன ஊடக வலையமைப்பு உதவி முகாமையாளர் வ.பிரபாத் துஷ்யந்த, லேக்ஹவுஸ் திளாக் பெரேரா மற்றும் நிஷங்க விஜய வார்த்தன மற்றும் லங்காதீபா சமந்த யஹம்பத் கல்வி அமைச்சின் ஊடக செயலாளர் ஹஸீம்டீன், மற்றும் பிரபல இலக்கியவாதிகள், கலைஞர்கள், கவிஞர்கள் கலந்து கொள்ளவுள்னர்.

இறுதி நிகழ்வாகப் பாடசாலை மாணவர்களுக்குப் புத்தக பை மற்றும் கொப்பிகள் வழங்கப்படவுள்ளன.





# இரணைமடுவின் 104 ஆம் ஆண்டில் 104 பானைகளில் பொங்கல் நிகழ்வு!





இரணைமடுக் குளத்தின் 104 ஆம் ஆண்டை முன்னிட்டு கனகாம்பிகை அம்மன் ஆலய முன்றலில் 104 பானைகள் வைத்து கலை பண்பாட்டு நிகழ்வுகளுடன் நேற்று முன்தினம் (17) பொங்கல் நடைபெற்றது.

இரணைமடு கமக்கரர் அமைப்புக்களின் சம்மேளன தலைவர் வி. நடராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக கிளி நொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். முரளிதரன் கலந்து கொண்டார்.

பொங்கல் நிகழ்வில் சம்பிரதாய பூர்வமாக புதிர் எடுத்து வரப்பட்டதைத் தொடர்ந்து பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

பிரதான பொங்கல் பானை ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து 104 பானைகளில் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து பாரம்பரிய கலை, கலாசார, விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் விவசாயிகளுக்கான மதிப்பளித்தல் நிகழ்வுகள், பரிசிப்பு நிகழ்வுகளுடன் விருந்தினர் உரைகள் இடம்பெற்றன. துறை சார்ந்த திணைக் கள அதிகா ரிகள், சக்தி தொலைக்காட்சி நிறுவ னத்தினர், விவசாயிகள், பொது மக்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்று மாநகர சபையின் உதவியுடன் தென் கிழக்குப் பல்கலையில் சுத்திகரிப்புப் பணி

(நூருல் ஹுதா உமர்)

அண்மையில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கின் காரணமாகத் தென் கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் சில பகுதிகள் வெகுவாக பாதிக்கப்பட்டிருந்தன. இதில் பௌத்த, இந்து மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்களும் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்தன.

இந்தநிலையில்மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 22 ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தலைமையில் இரண்டாது நாளாகவும் சுத்திகரிக்கும் நிகழ்வு நேற்றும் இடம்பெற்றது.

இந்தச் சுத்திகரிப்புப் பணியில் அக்கரைப்பற்று மாநகரசபையின் தீ அணைப்புப் பிரிவும் இணைந்து கொண்டது.

உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கருடன் நூலகர் எம்.எம்.றிபாவுட்டீன் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர், கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், அரபு மற்றும் இஸ்லாமிய பீடத்தின் பீடாதிபதி எம்.எச்.ஏ. முனாஸ், வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.சபீனா எம்.ஜி.எச்., பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ஏ. எம்.எம். முஸ்தபா, வேலைப் பகுதி பொறியியலாளர் எம்.எஸ்.எம். பஸில், மற்றும் பேராசிரியர்கள், நிர்வாக உத்தி யோகத்தர்கள், கல்விசாரா ஊழியர் சங்க தலைவர் எம்.ரீ.எம். தாஜுதீன், செயலாளர் எம்.எம். முஹம்மட் காமில் உள்ளிட்டோர் சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபட்டனர்.



# வெள்ள நிவாரணம் பழுகாமத்தில் வழங்கல்

போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பழுகாமம் மற்றும் பட்டாபுர மக்களுக்கு பி.யு.டி.எஸ். அமைப்பின் அனுசரணையோடு பழுகாமம் பி.ஓ.எஸ்.ஏ.டி. அமைப்பால் நிவாரணம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் சோ.ரங்கநாதன் மற்றும் ஏற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.

பி.யு.டி.எஸ். அமைப்பின் பிரித்தானியா கிளை தலைவர் அழகரெத்தினம் கங்காதரனிடம் பழுகாமம் பி.ஓ.எஸ்.ஏ.டி. அமைப்பினர் முன்வைத்த கோரிக்கைக்கமைவாக இந்த நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வெருகலில் நடமாடும் சேவை

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் பிரதேச செயலகத்தில் நடமாடும் சேவை நேற்று (18) பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு, தேசிய அடையாள அட்டை பெறுதல் உட்பட சமூக சேவை கள் திணைக்களம் ஊடான சேவைகள் என பலதரப்பட்ட சேவைகள் மக்களின் நலன் கருதி இடம்பெற்றன.

இதில் சுமார் 1500 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

இதில் வெருகல் பிரதேச உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அஸ்வெசும முகாமையாளர்கள், கிளைத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# இந்தியாவிலேயே ஊழல் மிகுந்த அரசு கொண்ட மாநிலம் அசாம்!

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு



இந்தியாவிலேயே ஊழல் மிகுந்த அரசும், முதல்வரும் கொண்ட மாநிலம் அசாம் மாநிலம் என்று ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி மணிப்பூர் முதல் மும்பை வரை இந்திய ஒற்றுமை நியாய யாத்திரை மேற்கொண்டு வருகிறார்.

கடந்த 14 ஆம் திகதி மணிப்பூரின் தவுபால் மாவட்டத்தில் இருந்து இந்த யாத்திரை தொடங்கியது. தற்போது அசாமில் நடந்து வரும் யாத்திரை வியாழக்கிழமை மதியம் அங்குள்ள சிவசாகர் மாவட்டத்தில் இருந்து மரியானி நகரை அடைந்தது.

அப்போது, சிவசாகர் மாவட்டத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய ராகுல் காந்தி,

"அசாமில் ஆளும் பா.ஜ.க. அரசும் அதன் கொள்கை ஊற்றான ஆர் எஸ்.எஸ். அமைப்பும் இணைந்து பொதுமக்கள் பணத்தை சூறையாடி வருகிறது. இந்தியாவிலேயே ஊழல் மிகுந்த மாநிலம் என்றால் அது அசாம் தான். பெரிய ஊழல்வாதி என்றால் அது அசாம் முதல்வர்தான்.

இந்த யாத்திரையில் அசாம் அரசாங்கத்தில் என்ன நடக்கிறது என்பதை நாங்கள் தோலுரிப்போம். அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வ சர்மாவின் ஒட்டுமொத்த குடும்பமும் ஊழலில் ஈடுபட்டுள்ளது. அவரது மனைவி, குழந்தைகள் அனைவரும் ஊழல்வாதிகள். பணத்தைக் கொண்டு அசாம் மக்களை விலைக்கு வாங்கலாம் என்று அவர் நினைக்கிறார்.

அசாம் மக்களை அப்படி விலைக்கு வாங்கிவிட முடியாது. மணிப்பூர் பிரிந்து கிடக்கிறது. மாதக்கணக்கில் அங்கு வன்முறை நிலவுகிறது. மக்கள் வன்முறையால் வீடுகளை, உடைமை களை இழந்து தவிக்கின்றனர். அங்கே இன்னும் அமைதி திரும்பவில்லை. இருந்தும் இதுவரை பிரதமர் அங்கு செல்லவில்லை" – என்றார்.

ராகுல் காந்தியின் இந்தக் கருத்துக்கு பதிலடி கொடுத்த முதல்வர் பிஸ்வ சர்மா, "என்னைப் பொறுத்தவரை இந்தியாவிலேயே காந்தி குடும்பம் தான் ஊழல் நிறைந்த குடும்பம். அவர்கள் ஊழல்வாதிகள் மட்டுமல்ல. போலியானவர்கள். அவர்களின் குடும்பப் பெயர் காந்தி கிடையாது. போலிப் பெயரை சுமந்துகொண்டு திரிகிறார்கள்" – என்றார்.

இதற்கிடையில், யாத்திரையை ராகுல் காந்தி நிர்ணயிக்கப்பட்ட பாதையில் மேற்கொள்ளாமல் வேறு பாதைகளில் சென்றதாகக் கூறி அசாம் மாநில அரசு ராகுலின் நடைபயணத்துக்கு எதிராக வழக்குப் பதிவு செய்துள்ளது.

# மோடி இந்தியாவுக்கான மிகச்சிறந்த தலைவர்: அமெரிக்கப் பாடகி மேரி மில்பென் புகழாரம்



பிரதமர் நரேந்திர மோடி இந்தியா வுக்கும், இந்திய – அமெரிக்க உறவுக் கும் மிகச்சிறந்த தலைவர் என்று அமெரிக்காவைச் சேர்ந்த நடிகையும் பாடகியுமான மேரி மில்பென் புகழாரம் சூட்டியுள்ளார்.

பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் மேரி மில்பென் கருத்து தெரிவிக்கையில்,

"அமெரிக்காவில் நரேந்திர மோடிக்கு மிகப்பெரிய ஆதரவு இருக் கிறது என்பதை நான் உறுதியாக சொல்வேன். அவர் மீண்டும் பிரதமராக தேர்ந்தெடுக்கப்படுவதை காண இங்கு பலரும் விரும்புகின்றனர். இந்தியா வுக்கான மிகச்சிறந்த தலைவர் அவர்.

இந்தியாவுக்கும், அமெரிக்காவுக் கும், ஏன் உலகத்துக்கே கூட இது முக்கிய மான ஒரு தேர்தல் காலகட்டமாக இருக்கப் போகிறது என்று நான் நம்புகிறேன். குடிமக்களாக நம் அனைவருக்கும் ஒரு மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது. இந்த தேர்தல் காலகட்டத்தில் உங்கள் குரல் கேட்கவேண்டும் என்றும், நீங்கள் வாக்களிக்க வேண்டும் என்றும் இந்தியாவில் இருக்கும் என் அன்புக்குரிய குடும்பங்களை நான் ஊக்குவிக்கிறேன்.

நான் பிரதமர் மோடியின் மிகப்பெரிய ஆதரவாளர் என்பதில் எந்த ரகசியமும் இல்லை. அது இந்தியாவில் உள்ள அனைவருக்கும் தெரியும். இந்தியாவும், இந்தியா – அமெரிக்கா இடையிலான உறவுக்கும் பிரதமர் மோடி மிகச்சிறந்த தலைவர் என்று நான் நம்புகிறேன். குடிமக்களாக நாட்டில் மாற்றத்தைக் கொண்டுவரும் சக்தி நம்மிடம் உள்ளது.

அனைத்து மக்களுக்கும் ஏற்ற சிறந்த கொள்கைகளை கொண்டு வரும் அதிகாரம் நம்மிடம் உள்ளது. எனவே இந்த தேர்தல் காலத்தில் ஒவ்வொரு இந்திய குடிமகனும் தங்களின் குரலையும் வாக்கையும் ஓங்கி ஒலிக்கச் செய்வார்கள் என்று நம்புகிறேன்." – என்றார்.

கடந்த ஜூன் மாதம் பிரதமர் மோடி அமெரிக்கா சென்றிருந்தபோது அந்த மேடையில், மேரி மில்பென் இந்திய தேசிய கீதமான 'ஜன கன மன' பாடி, பிரதமர் மோடியின் ஆசிர்வாதம் பெறுவதற்காக அவரது பாதம் தொட்டு வணங்கினார். இந்தக் காட்சி சமூக வலைதளங்களில் வைரலானது.

# இராணுவத்தைத் திரும்பப்பெறுவது குறித்து இந்தியா - மாலைதீவுக்கு இடையே பேச்சு!



மாலைதீவுடனான உறவு விரிசலுக்கு மத்தியில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், மாலைதீவு வெளியுறவுத்துறை அமைச்சர் மூசா ஜமீரை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

அமைச்சர்கள் இருவரும் இருநாட்டு உறவுகள் பற்றி வெளிப்படையான உரையாடல் நடத்தியுள்ளனர். இருநாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டிருக்கும் நிலையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அணிசேரா அமைப்பின் இரண்டு நாள் உச்சி மாநாடு உகாண்டா தலைநகர் கம்பாலாவில் இன்று தொடங்குகிறது. அதில் பங்கேற்பதற்காக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கம்பாலா சென்றுள்ளார்.

இதனிடையே அவர் நேற்று அங்கு, மாலைதீவு வெளியுறவுத்துறை அமைச்சர் மூசா ஜமீரை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இதுகுறித்து ஜெய்சங்கர் தனது எக்ஸ் பக்கத்தில் சந்திப்பு குறித்த புகைப்படத்தை வெளியிட்டு,

”கம்பாலாவில் இன்று மாலைதீவு வெளியுறவுத்துறை அமைச்சர் மூசா ஜமீரை சந்தித்துப் பேசினேன். இரு நாடு உறவுகள் பற்றி வெளிப்படையாக உரையாடினோம். மேலும் அணிசேரா அமைப்புத் தொடர்பான விவகாரம் குறித்தும் விவாதித்தோம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

மாலைதீவு வெளியுறவுத்துறை அமைச்சர் மூசா ஜமீர் தனது எக்ஸ் பக்கத்தில்,

”அணிசேரா அமைப்பின் உச்சி மாநாட்டுக்கு இடையில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரை சந்தித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்திய இராணுவ வீரர்களைத் திரும்பப் பெறுவது, மாலைதீவில் நடந்து கொண்டிருக்கும் வளர்ச்சித் திட்டங்களை விரைவுபடுத்துவது, சார்க் மற்றும் அணிசேரா அமைப்பின் ஒத்துழைப்பு குறித்து நாங்கள் உரையாடினோம். இருதரப்பு உறவுகளை மேலும் வலுப படுத்தி விரிவாக்குவது குறித்தும் நாங்கள் விவாதித்தோம்” என்று தெரிவித்துள்ளார்.

# ஈரான் மீது பாகிஸ்தான் குண்டுவீச்சு தாக்குதல்!

ஈரான் பகுதிகளில் பாகிஸ்தான் போர் விமானங்கள் நேற்று குண்டுவீசி தாக்குதல் நடத்தின.

சன்னி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பாகிஸ்தானுக்கும், ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் ஈரானுக்கும் இடையே அவ்வப்போது மோதல் ஏற்பட்டு வருகிறது.

கடந்த டிசம்பரில் ஈரானின் சிஸ்தான் பகுதியில் பாகிஸ்தானை சேர்ந்த ஜெய்ஷ் அல்-தும் என்றசன்னி தீவிரவாத அமைப்பு தாக்குதல் நடத்தியது. இதில் ஈரான் இராணுவ மூத்த தளபதி உட்பட 11 வீரர்கள் உயிரிழந்தனர்.

இதற்கு பதிலடியாக கடந்த 16 ஆம் திகதி பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணம், பஞ்ச்கூர் பகுதியில் ஜெய்ஷ் அல்-தும் தீவிரவாத முகாமை குறிவைத்து ஈரான் இராணுவம் ஏவுகணை மற்றும் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியது.

இதையடுத்து, தனது நாட்டிலிருந்த ஈரான் தூதரை வெளியேற்றியது பாகிஸ்தான். அதோடு பாகிஸ்தான் போர் விமானங்கள் மற்றும் ட்ரோன்கள் ஈரானின் தென் கிழக்கு பகுதியில் நேற்று குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின.




இதுகுறித்து பாகிஸ்தான் இராணுவ வட்டாரங்கள் கூறும்போது,

“ஈரானின் தென்கிழக்கு பகுதியில் சுமார் 50 கிலோ மீற்றர் தொலைவு வரை ஊடுருவிய எங்களது போர் விமானங்கள், பலுசிஸ்தான் தீவிரவாதிகளின் 7 முகாம்கள் மீது குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. இதில் ஏராளமான தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்” – என்றன.

ஈரான் வெளியுறவுத் துறை கூறும்போது, பாகிஸ்தான் தாக்குதலில் 4 குழந்தைகள், 3 பெண்கள் உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஈரானில் செயல்படும் பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளை, ஈரான் வெளியுறவுத் துறை நேற்று நேரில் வரவழைத்து கடுமையாக எச்சரிக்கை விடுத்தது.



# புத்தளம் நகர சபைக்கு சுத்திகரிப்புக்கு வாகனம்

## நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம் வழங்கினார்

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் நகரில் அதிகரித்து வரும் குப்பைகள் அகற்றுவதில் ஏற்படும் தாமதத்துக்குக் காரணமாக மனித வளம் மற்றும் இயந்திரப் பற்றாக்குறை என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நகர அபிவிருத்திக் குழுத் தலைவருமாகிய அலி சப்ரி றஹீம் 6 வாகனங்களை வழங்கியுள்ளார்.

சுத்திகரிப்புப் பணிகளின் பொது தாமதம் ஏற்படுகிறது என்று மக்கள் சந்திப்புக்களின் போதும் தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள் ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தனது சொந்த நிதியின் இந்த வாகனங்களைக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.



இனிவரும் காலங்களில் தினசரி வீடுகளில் காணப்படும் உணவுக் கழி வுகளைத் தனியாக பிரித்து அன்றாடம் உலாவரும் வாகனங்களில் வழங்கு வதன் மூலம் சுகாதாரத்தைப் பேண முடியும் என்று தெரிவித்துள்ளார்.

# போலி நாணயத் தாள்களுடன் நல்லதண்ணி நகரில் ஒருவர் கைது

(மஸ்கெலியா நிருபர்)

வலஸ்முல்லை பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய சந்தேக நபர் போலி நாணயத் தாள்களுடன் கைது செய்யப் பட்டுள்ளார்.

நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகரவுக்குக் கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து நல்லதண்ணி நகரில் நேற்று அதி காலை மேற் கொண்ட சோதனையின் போது அவர் கைது செய்யப்பட்டுள் ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து சட்ட விரோதமாக அச்



சிடப்பட்ட 1000 ரூபா நாணய தாள்கள் 11 ஆயிரமும் 500 ரூபா நாணயத் தாள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் பொலி ஸார் தொடர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.